[1978 ஏப்ரல் 1

திரு. வி. கொ. சின்னசாமி: தலைவரவர்களே, பவானி சாகர் தொகுதியில் புஞ்சைப்புளியம்பட்டி கிராமத்தில் அரிசனக் குடியிருப்பு கட்டுகிறார்கள், வேறு எங்கும் இல்லை. அப்படிக் கட்டப்பட்டிருக்கிற இடத்தில்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி தென்னாற் காடு மாவட்டத்தைப் பற்றியது. நீங்கள் கேட்கின்ற கேள்விக்கு அமைச்சரவர்களிடம் பதில் இருக்காது. தயவுசெய்து உட் காருங்கள்.

தாழ்த்தப்பட்ட, பிற்பட்ட வகுப்பு மாணவர்களுக்குப் புத்தகங்கள் வழங்கல்

* 760 வினா—திரு. மா. மணிமாறன்: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தாழ்த்தப்பட்டோர், பிற்பட்டோர் ஆகிய பிரிவைச் சார்ந்த மாணவர்களின் உதவித் தொகையை புத்தகமாகக் கொடுப்பதில் ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க அரசு பண மாகக் கொடுக்க முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தாழ்த்தப் பட்டோர், பிற்பட்டோர் ஆகிய பிரிவைச் சார்ந்த மாணவர்களின் உதவித் தொகையை ரொக்கமாகத் தருவதற்குப் பதிலாகப் புத்தகங்கள் வழங்கும் திட்டம் கல்வியாண்டு 1977-78 முதல் செயல்படுத்தப்படுகிறது. பணமாக வழங்குவது தவிர்க்கப் பட வேண்டும் என்று அரசு முடிவு செய்துள்ளது. புத்தகமாகக் கொடுப்பதில் கால தாமதம் ஏற்படுவதைத் தவிர்க்க நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, புத்தகமாகக் கொடுக்கப்பட்டதில் இந்த ஆண்டு ஏற்பட்ட காலதாமதத்தை அமை ச்சரவர்கள் அறிந்திருக்கிறார்கள். ஆகவே, தொடர்ந்து பணமாகக் கொடுத்து வந்தால் கால தாமதம் தவிர்க்கப்படுவதோடு, சில நேரங்களில் மிச்சப்படும் பணத்தைக் கொண்டு நோட்டு, புத்தகம் வாங்க உதவியாக இருக்கும். அதனால் அரசு உதவித் தொகையை ரொக்கமாகக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர் களே, பணமாக வழங்குவதற்கு முறையாக மனு போட வேண்டும். ஒவ்வொரு கல்வியாண்டிலும் இந்த மனு சம்பந்தப்பட்ட அலு வலகத்திற்கு வருவதற்கு பாதி ஆண்டைத் தாண்டிவிடுகிறது. ஆகவே, பணமாக வழங்குவது ஆண்டு இறுதியில்தான் கொடுக்கப் படுகிறது என்ற குறை இருந்தது. புத்தகமாக வழங்க ஏற்பாடு

1978 ஏப்ரல் 1]

செய்தால் உடனுக்குடன் மாணவர்களுக்குக் கிடைக்கும் சூழ்நிலை ஏற்பட்டு, காலதாமதம் தவிர்க்கப்படுகிறது. ஆகவே, புத்தகமாக வழங்கும் முறை செயல்படுத்தப்படுகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம்: தலைவரவர்களே, தாழ்த்தப் பட்டோர், பிற்பட்டோர் ஆகிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவித்தொகையைப் புத்தகமாகக் கொடுக்கும்போது எதிர் கட்சித் தலைவர் டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களுடைய பெயர் போட்டு, ''டாக்டர் கலைஞர் 48-வது, 50-வது ஆண்டு பிறந்தநாள் அன்பளிப்புப் புத்தகங்கள்'' என்று அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் அவருடைய சொந்தப் பணத்திலிருந்து கொடுக்கப்பட்டதா அல்லது அரசாங்கப் பணத்தை விளம்பரத்திற்காகக் கொடுத்தார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் அளிக்கப்படவில்லை)

(முற்பகல் 9-50)

திரு. என். பழனிவேல்: பேரவைத் தலைவரவர்களே, மாணவர்களுக்குப் பணத்திற்குப் பதிலாக புத்தகங்களாகக் கொடுக்கப் படுகிறது. ஏனென்றால் பணமாகக் கொடுப்பதற்கு காலதாமதம் ஏற்படுகிறது. அதனால்தான் இவ்வாறு புத்தகமாகக் கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். ஆனால் சென்ற ஆண்டு புத்தகங்கள் வழங்குவதில் கூட காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. காலாண்டு பரீட்சை முடிந்த பின்னரும் கூட பல மாணவர்களுக்குப் புத்தகங்கள் போய்ச் சேரவில்லை. ஆகவே இந்த ஆண்டாவது எல்லாப் புத்தகங்களும் ஒரே சமயத்தில், ஒவ்வொரு புத்தமாகக் கொடுக்காமல் கல்வியாண்டு ஆரம்பித்த உடனேயே கொடுப்பதற்கு அரசு உத்திரவிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: பேரவைத் தலைவரவர்களே, வருகிற கல்வியாண்டிலிருந்து எல்லாப் புத்தகங்களும் உரிய நேரத்தில் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை: பேரவைத் தலைவரவர்களே, இந்த மாணவர்களுக்குக் கொடுக்கக்கூடிய உதவித் தொகையை புத்தகமாகக் கொடுப்பதிலும் பல பகுதிகளிலே கடைசி வரையிலே கூடப் போய்ச் சேராமல் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது. குறிப்பாக 60 உயர்நிலைப்பள்ளிகளில் இறுதிவரையில் போய்ச் சேரவில்லை. ஆகவே, பணமாகக் கொடுக்கப்பட்டது, புத்தகமாகக் கொடுக்கப்படுகின்ற இந்த நிலையில் பல பகுதிகளில் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. ஆகவே இதனைப் பள்ளி துவங்கும் முன்னமேயே கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பேரவைத் தலைவரவர்களே, பணம் கொடுக்கின்ற நேரத்திலேயும் சில சிக்கல்கள் சில குறைபாடுகள் இருக்கின்றன என்பதை அரசின் கவனத்திற்கு வந்திருக்கிறது. ஆகவே புத்தகமாகக் கொடுக்க அரசு ஆணையிட்டிருக்கிறது. வருகின்ற நடப்பாண்டிலிருந்து எந்த விதமான குறைபாடுமின்றி ஆரம்பத்திலேயே எல்லாப் புத்தகங்களையும் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி சுப்புலட்சுமி : தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் புத்தகங்களை வசதி உள்ளவர்களிடமிருந்தோ அல்லது குடும்பத்தில் மூத்தவர்கள் யாராவது படித்தவர்கள் இருந்தால் அவர்களிடமிருந்தோ பெறுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே பழையபடி உதவித் தொகையை பணமாகக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த வினாவிற்கு ஏற்கனவே பதில் அளித்திருக்கிறேன். மீண்டும் அரசு இதுபற்றி பரிசீலிப்பதாக உத்தேசம் இல்லை.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, புத்தகங்கள் காலதாமதம் இன்றி பள்ளி ஆரம்பத்திலேயே கொடுப்பதற்கு அரசு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். திரும்பத் திரும்ப அதையே கூறுகிறார்கள். ஆகவே என்ன நடவடிக்கை அரசு எடுத்துக்கொண்டுள்ளது என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, அரசு எடுத்த நடவடிக்கைகள் ஒரு நீண்ட பட்டியல். அதை இங்கே படிப்பதைவிட தனியாகக் கொடுப்பதே சிறந்தது என்று நினைக்கிறேன். ஆகையால் அதனைத் தனியாகக் கொடுத்து விடுகிறேன்.

கரும்பின் விலை

*761 வினா—திரு. எஸ். ஜே. இராமசாமி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு 1976-77, 1977-78 (இதுவரையில்) ஆகிய இரண்டு பருவ வருடங்களில் விவசாயிகளிடமிருந்து சப்ளை செய்யப்பட்ட கரும்பு எத்தனை டன்கள் ?